# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2013. 09. 09 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# பௌத்த அறநிலையங்கள்
# (திருத்தம்)

**பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

ச.வ.ஓ– 27/2012

## பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

**2**. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம், ''பௌத்த அலுவல்கள் ஆணையாளர்'' என்னும் சொல்லமைப்பு முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவில் தவிர அச்சட்டவாக்கத்தில் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொல்லமைப்புக்குப் பதிலாக, ''பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி'' என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*318 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) ''பிக்கு'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

''பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதி என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கின்ற ஆள் என்று பொருளாகுமென்பதுடன், எவரேனும் ஆணையாளரையும், பிரதி ஆணையாளரையும் மற்றும் உதவி ஆணையாளரையும் உள்ளடக்கும்; அத்துடன்

2-PL 007560 -225 (2013/08)

(ஆ) ''பௌத்த அலுவல்கள் ஆணையாளர்'' என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும் .

**4**. (1) இச்சட்டம், தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்குள்ள எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும் மற்றும் கடப்பாடுகளும் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியின் உரிமைகளாகவும், பொறுப்புக்களாகவும் மற்றும் கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*உரிமைகளையும், பொறுப்புக் களையும் மற்றும் கடப்பாடு களையும் கைமாற்றுதல்.*

(2) பௌத்த அலுவல்கள் ஆணையாளரினால் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தொடங்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் பூர்த்திசெய்யப்படாததுமான ஏதேனும் செயல் அல்லது நடவடிக்கை, பௌத்த அலுவல்கள் ஆணையாளர் தலைமையதிபதியினால் தொடர்ந்து நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படலாம்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்